யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

விடுமுறைக்கால செயலட்டை–2020 – தரம் 11

## Holiday Worksheet – 2020 – Grade 11

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் மொழியும் இலக்கியமும் | 22 | T | III | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |
| சுட்டெண்<br>Index No | | | | தமிழ் மொழியும் இலக்கியமும் |

பகுதி – III

**01. சுருக்கமான விடை தருக**

1. அ. நளவெண்பாவை விருத்தப்பாவிலே பாடியவர் யார்?
   ஆ. அந்நூலின் பெயர் என்ன?

2. அ. பாத்துண்ணலுக்குரிய ஐவரும் யாவர்?
   ஆ. படைப்போர் என்ற இலக்கிய வகையை கையாண்டு எழுதப்பட்ட முதல் நூல் எது?

3. அ. பழுத்த வழக்கறிஞர் என்பதன் பொருள் யாது?
   ஆ. கேலிச்சித்திரம், வசனக்கவிதை, சுயசரிதை என்பவற்றை தமிழிலே அறிமுகம் செய்தவர் யார்?

4. அ. படிக்காசு புலவர் எவ்வகைப் பாட்டு இயற்றுவதிலே சிறந்தவர்?
   ஆ. படிக்காசுப்புலவர் எழுதிய நூல் எது?

5. அ. கல்லுளிமங்கன் என்பதன் பொருள் யாது?
   ஆ. “பரணி” என்பதனை விளக்குக

6. அ. இருதுபர்ணன் என்பவன் யார்?
   ஆ. அருவிவெட்டுப்பாடலில் இடம் பெறும் நம்பிக்கைகள் எவை?

7. அ. விரல் கட்டம் என்பதன் அர்த்தம் யாது?
   ஆ. அன்பின் நிறைந்தாள் எனக்கூறப்பட்டவள் யார்?

8. அ. சினிமாவில் இடம்பெறும் மூவகை ஒலிகளும் எவை?
   ஆ. திருக்குறள் எவ்வகை ஓசையை உடையது?

9. அ. குறுந்தொகை பாடலின் அடிவரையறை யாது?
   ஆ. “தச்சன் செய்த சிறுமா” பாடலின் துறை யாது?

10. அ. செயிருடன் சென்ற சேயிழை யார்?
    ஆ. நரகம் புகினும் எள்ளேன் என்று பாடியவர் யார்?

(20 புள்ளிகள்)

02. (1) பின்வரும் பாடல்களையும், உரைப்பகுதியினையும் படித்து கீழ்வரும் வினாவிற்கு விடை தருக.

அ. பங்க பழனத்துழும் உழவர்
　　பலவின் கனியைப் பறித்ததென்று
சங்குட்டெறிய குரங்கிளநீர்
　　தனைக் கொண்டெறியும் தமிழ்நாடா!
கொங்ககர்க்கு அமராவதி அளித்த
　　கோவே இராச குல திலகா
வெங்கட்பிறைக்கும் கரும்பிறைக்கும்
　　மெலிந்தப்பிறைக்கும் விழிவேலே

அ. கரும்பிறையின் ஐவகை அம்புகளும் எவை?
ஆ. உழவர் இளநீர் பறிக்க கையாண்ட நுட்பம் யாது?

ஆ. வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்தும்கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியறிந்து வானவரை அழைப்பர்
கவன சித்தர் வந்து வந்து காய சித்தி விழைப்பர்
தேனருவி திரையெழுப்பி வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்.
கூனலிளம் பிறை முடித்த வேணியலங்காரர்
குற்றாலத்திரி கூட மலையெங்கள் மலையே

அ. கொஞ்சும் - கெஞ்சும் என்ற வகையான பின் எதுகை எவ்வகைத் தொடை என அழைக்கப்படும்
ஆ. கதிரவனின் குதிரைகளும், சக்கரங்களும் வழுக்கக் காரணம் யாது?

இ. படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும்
செலிவியை தன் பாழ்ந்த பாவி
குடரிலே நெடுங்காலம் கிடைத்தேற்கு
உயிர்ப்பாரம் குறைந்து தேய
உடர்எலாம் உயிரிலா எனத் தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றே
இடரிலா முகத்தாளை அறிந்திலையேல்
இந் நின்றாள் என்னை ஈன்றாள்

அ. ‘‘குடரிலே நெடுங்காலம் கிடைத்தேற்கு’’ எனக்குறிப்பிடக்காரணம் யாது?
ஆ. ‘‘இடரிலா முகத்தாள்’’ எனக்குறிப்பிடப்படுபவள் யார்?

ஈ. தூல வடிவில் நின்றும்மறைந்த இலட்சிய புருடர்களை இயற்கைப் புலமையும் அறிவுத் தெளிவுமுள்ள உண்மைக்கவிஞர்கள் காவியங்களிலே சூக்கும வடிவில் அமைத்துக்காட்டுகின்றார்கள்.இவ்அற்புதக்காட்சியில் இலக்கியப் புருடர்களை காணாமற் கண்டு பேரானந்தம் அடைகிறோம். இலட்சியங்களும், இலட்சியவாதிகளும் அபின்னம்

அ. ‘‘சூக்கும வடிவில் ‘‘என்பதன் பொருளை தெளிவு படுத்துக
ஆ. ‘‘அபின்னம்’’ என்ற சொல்லின் அர்த்தத்தினை விளக்குக.

(2). இப்படியாக சந்தி பிரிக்காத பாடல் போலத் தலைசுற்றியது விவகாரம் மறுபடியும் நான் அந்தக்கடைக்கு கம்பியூட்டரை கொத்துக்கொத்தாக ஆராய்ச்சி செய்து வித்துவான் பட்டம் பெற்ற ஒரு நண்பரோடு படையெடுத்தேன். நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர்.
அ. ‘‘சந்தி பிரிக்காத பாடல்’’ என்பதனூடாக கூறவருவதைத் தெளிவு படுத்துக.
ஆ. தலபுராணம் எழுதியவர் என்பதன் பொருளைக்குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

- **03, 04 விளாகக்ளுக்கு கட்டாயம் விடை தருக. 05, 06, 07 என்பவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு விடை தருக**.

03. அ. நாவலரின் நேர்மை, திறமை என்பன வெளிப்படும் விதத்தை தருக?
ஆ. கம்பியூட்டர் சிறுகதையில் வெளிப்படும் உத்திகளை உதாரணங்களோடு தருக?

(15 புள்ளிகள்)

04. அ. குற்றாலக்குறவஞ்சியின் அமைபபினை விளக்குக?
ஆ. குகப்படலத்தில் கம்பனின் பாத்திர அறிமுகத்தனித்துவத்தினை விளக்குக?

(15 புள்ளிகள்)

05. நல்ல சினிமாவில் அடிப்படைக்கூறுகளை விளக்குக?

06. முதுமையின் ஏக்கத்தினை புறநானூறு வெளிப்படுத்தும் விதத்தை விளக்குக?

07. முன்மாதிரியான பாத்திரமாக மூத்தம்மா அமைவதை விளக்குக?

(10 புள்ளிகள்)